# மட்டக்களப்பு பூர்வ சரித்திரம் காட்டும் கலிங்கமகோன்

ச. சிவகணேசன்
வரலாற்றுத்துறை, கிழக்குப் பல்கலைக்கழகம்
shivahaneshan@gmail.com

**ஆய்வுச் சுருக்கம்**

வெருகல் முதல் குமணை வரையுள்ள நிலப்பரப்பு தமிழ் மொழி வழக்கிலும் இங்கு வழங்குகின்ற மொழி வழக்கிலும் 'மட்டக்களப்பு தேசம்' எனப்படுகின்றது. தற்போதைய 'கிழக்கு மாகாணம்' என்ற வழக்கு ஆங்கிலேயர் ஆட்சிக் கால நிர்வாகப் பிரிப்பின் வளர்ச்சி நிலையாகும். இங்கு தமிழர்களும் முஸ்லிம்களும் வாழ்ந்து வருகின்றனர். மட்டக்களப்பு தேசத்திற்கு தொன்மையும் தொடர்ச்சியும் கொண்ட வரலாறு உண்டு. இதனை எவரும் மறுக்க முடியாது. ஆனால் ஐரோப்பியர் ஆட்சிக்கு முன்னரான வரலாறு, இலக்கியங்கள், மரபுகள், வாய்மொழிச் செய்திகள் என்பனவற்றில் புதைந்து கிடக்கின்றது. அறிவியல் ரீதியாக தொல்லியல் ஆதாரங்களைப் பயன்படுத்தி புலமைசார் நெறியின் கீழ் மட்டக்களப்பு வரலாறு இதுவரை ஆராயப்படவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது. பொலனறுவை நகரைக்கைப் பற்றி, அதிகாரம் செலுத்தி இருந்த (1215 - 1253) கலிங்கமகோன் என்பவன் மட்டக்களப்பு தேசத்தோடு ஏற்படுத்தியிருந்த அரசியல், கலாசாரத் தொடர்புகளை ஆராய்வதன் ஊடாக புதிய தகவல்களை வெளிக்கொணர முடியும். இவன் கலிங்கதேசத்தை சேர்ந்தவனாகையால், தன் தாய் நாட்டையும் பெயருடன் சேர்த்து 'கலிங்கமகோன்' என அழைக்கப்படுகின்றான். மகோன் பொலனறுவையைக் கைப்பற்றியபின், இலங்கை அரசியல் வரலாற்றுப் போக்கில் பெரும் மாறுதல்கள் ஏற்பட்டுக் கொண்டன. அதாவது இலங்கையின் தலைநகர் தென், தென் மேற்கு திசை நோக்கி கொண்டு செல்லப்பட்டது. கலிங்கமகோன் பொலனறுவை நகரை மையப்படுத்தி ஆட்சி செய்த காலப்பகுதியில் மட்டக்களப்பு தேசத்துடன் நெருக்கமான அரசியல், கலாசாரத் தொடர்பினை ஏற்படுத்தி இருந்தான். அவை தொடர்பிலான தடயங்கள் மட்டக்களப்பு தேசத்தில் காணப்படுகின்றன. கலிங்க மகோன் ஏற்படுத்திய தொடர்புகளினால், மட்டக்களப்பு தேசத்துக்கென தனித்துவமான தேச வழமைகள், வழக்காறுகள் தோற்றம் பெற்றுக் கொண்டன. கலிங்கமாகோனைப் பற்றி, வேறு எந்த நூல்களிலும் குறிப்பிடப்படாத பல தகவல்கள் மட்டக்களப்பு பூர்வ சரித்திரக் குறிப்புக்களில் காட்டப்பட்டுள்ளன. இந்த வகையில், மட்டக்களப்பு தேசத்துடன் மகோன் ஏற்படுத்தியிருந்த தொடர்புகளின் வகிபாகத்தை சாசனங்கள் மற்றும் தொல்லியல் எச்சங்கள், ஆலயத் தொழும்புகள், களஆய்வுகள், இலக்கியங்கள், மரபுக்கதைகள் போன்றவற்றில் வருகின்ற வரலாற்றுச் செய்திகளோடு ஒப்பிட்டு ஆராய்தல் ஆய்வின் அணுகுமுறையாகும்.

**சிறப்புச்சொற்கள் -** மட்டக்களப்பு தேசம், தொழும்புகள், சாசனங்கள்,தேச வழமை.

## 1. ஆய்வு அறிமுகம்

கி.பி.1214ஆம் ஆண்டு காலப்பகுதியில் பொலனறுவை இராச்சியத்தின் மீது படை யெடுத்து, அதனைக் கைப்பற்றி, 13ஆம் நூற்றாண்டின் பின்அரைப்பகுதிவரை அதிகாரத்தில் கலிங்கமகோன் இருந்துள்ளான். இவனது படையெடுப்புக் காரணமாக இலங்கை வரலாற்றில் மத்தியமயமான ஆட்சி முறை சிதைவடைந்து, இடம்பெயர் இராசதானிகள் கி.பி.16 நூற்றாண்டு வரை தொடர்ந்தமையும் குறிப்பிடத்தக்கது.

மட்டக்களப்பு தேசத்தோடு கலிங்கமகோன் ஏற்படுத்திய தொடர்புகளை மட்டக்களப்பு பூர்வ சரித்திரம் காட்டுகின்றது. இந்த நூலில் கலிங்க மகோன் பற்றிக் கூறப்பட்டுள்ளதைப் போன்று விபரங்கள் வேறு எந்த நூலிலும் இடம்பெற்றிருக்கவில்லை.

இந்த நூலிலும் மகாவம்ஸம், சூளவம்ஸம் போன்று பல இடங்களில் அதிக கற்பனைகள், இடைச்செருகல்கள், இட்டுக்கட்டிய கதைகள் சேர்க்கப்பட்டிருக்கின்றன. கலி ஆண்டில் காலம் குறிப்பிடப்பட்டுள்ளதால், குறிப்பிடப்பட்டுள்ள ஆண்டுகள் கிறிஸ்தவ வருடத்தோடு சமமானதாக ஒத்துப்போகவில்லை. பாளி இலக்கியங்களில் வருகின்ற ஆண்டுகளோடு முன்பின் முரண்பாடுகள் காணப்படுகின்றன என்பது குறிப்பிடத்தக்கது. வேறு ஆதாரங்கள், ஆவணங்கள் இல்லாத படியால் மட்டக்களப்பு தேசத்தோடு தொடர்புற்றிருந்த கலிங்கமாகன் தொடர்பில்,

மட்டக்களப்பு மான்மியம், மட்டக்களப்பு பூர்வ சரித்திரம் மற்றும் மரபுக் கதைகள் தரும் தகவல்களிலேயே நாம் தங்கியிருக்க வேண்டியுள்ளது.

மட்டக்களப்பு பூர்வ சரித்திரக் செய்திகளில் சமூகக் கட்டமைப்பு பற்றிய குறிப்புக்கள் தரப்பட்டுள்ளன. சமூகக்கட்டமைப்பானது கி.பி. 13ஆம் நூற்றாண்டில் கலிங்க மாகனோடு ஏற்பட்டதல்ல. மாறாக புராதன காலம் முதல் இருந்து வந்துள்ளது என்பதனை மட்டக்களப்பு பூர்வ சரித்திரக் குறிப்புக்கள் மூலம் அறிந்துகொள்ள முடிகின்றது. இந்த வகையில், கி.மு. முதலாம் நூற்றாண்டு முதல் திருக்கோவில் கந்தசுவாமி கோவில் பணிக ளோடு கலிங்கர் தொடர்புபடுத்தப்பட்டு, அவர்கள் முதன் மைப்படுத்தப்பட்டனர்.[1]

## 2. கலிங்க தேசம்.

'கலிங்க தேசம்' என்பது தற்போது 'ஒரிஸா' என அழைக்கப்படுகின்றது. இது கிழக்கு, மேற்கு எனப் பிரிந்து காணப்பட்டது. ஒரிசாவை மையப்படுத்திய பிரதேசம் மேற்குக்கலிங்கம் எனவும், மைசூரை மையப்படுத்திய பிரதேசம் கிழக்கு கலிங்கம் எனவும் அழைக்கப்படுகின்றது. கலிங்கம் தொண்டை மண்ட லத்தில் அமைந்திருந்தது. இதனுடன் சோழ மண்ட லமும் சேர்ந்திருந்தது. வட கலிங்கத்தின் அனேக மான பகுதிகள் தமிழ்ப் பிரதேசமாகவும், தெற்கு கலிங் கப்பிரதேசம் தெலுங்கர்களைக் கொண்டதாகவும் தற்போது காணப்படுகின்றது [2]. நாடு காண் பயணியான பிளினி என்பவன் ''பாடலி'' கலிங்கத்தின் தலைநகர் எனக் குறிப்பிட்டுள்ளார் [2]. 'பாடலி' என்பது இந்தி மொழியில் 'தலைநகர்' என்ற பொருளைத் தருகின்றது. தங்கேஸ்வரி கலிங்கம் தமிழ்ப் பிரதேசம் எனக் குறிப்பிட்டுள்ளார்.[2] இந்தியாவின் முதன்மை வரலாற்று ஆய்வாளர்களில் ஒருவரான நீலகண்ட சாஸ்திரி, கலிங்கநாடு முழுவதும் கிழக்கு கலிங்கத்தின் கட்டுப்பாட்டில் இருந்தது எனவும் கிழக்கு கலிங்கத்தின் முதல் மன்னன் முதலாம் வஜ்ரஹஸ்த (Vajrahasta I) என்பவன் எனவும் குறிப்பிட்டுள்ளார்(1038) [4]. வஜ்ரஹஸ்தவினால் ஆரம்பித்து வைத்த கலிங்கர் ஆட்சி கிறிஸ்து சகாப்தத்தின் 1432ஆம் ஆண்டுவரைத் தொடர்ந்தது.

## 3. இலங்கையும் கலிங்கமும்.

கி.பி. 13ஆம் நூற்றாண்டில், பொலனறுவையின் மீது படையெடுத்து அந்நகரைக் கலிங்கமாகோன் கைப் பற்றிக்கொண்டான். இந்தக் காலப்பகுதியில் இருந்து தான் கலிங்கத் தொடர்புகள் ஏற்பட்டதாக சிலர் கருதலாம். இது பற்றிய குறிப்புக்கள் சூளவம்ஸத்திலும் காட்டப்பட்டுள்ளன. மட்டக்களப்பு பூர்வ சரித்திரம் கலிங்கத் தொடர்புகளை கி.பி. 3ஆம் நூற்றாண்டு முதல் காட்டுகின்றது. அதேவேளை, விஜயன் வருகை முதல் இலங்கையுடன் கலிங்கதேசத் தவர்கள் தொடர்புகளை ஏற்படுத்தியிருந்தனர் என்பது வெளிப்படுத்தப்பட்டுள்ளது [1]. அதிலும் மட்டக்களப்பு அரசுகளோடு அவர்கள் நெருக்கமான தொடர்புகளைக் கொண்டிருந்தனர் என்பதனை மட்டக்களப்பு பூர்வசரித்திரம் எடுத்தியம்புகின்றது [1].

மட்டக்களப்பில் கலிங்கரை, 'கலிங்கர் குடி', 'காலிங் கர் குடி' என அழைப்பர். ஒரிசாவிலும் கலிங்கர், காலிங்கர் என்ற சொற்கள் புழக்கத்திலுள்ளன. தற்சமயம் ஒரிசா மொழி பேசப்பட்டாலும் அங்குள்ள ஆதிவாசிகள் திராவிட மொழி பேசுகின்ற 14 இனக்குழுக்கள் சேர்ந்தவர்கள் என ஆய்வுகள் வெளிப்படுத்தியுள்ளன. ஒரிஷாவிலுள்ள வரலாற்று ஆவணங்களின் படி, பல நூறு வருடங்களுக்கு முன்பு திராவிட பூமியாக கலிங்கம் இருந்தமை உறுதிப் படுத்தப்பட்டுள்ளது [5]. இலங்கையுடன் நேரடியாக தொடர்பு கொண்டமைக்கான சான்றுகள் இதுவரை உறுதிப்படுத்தப் பட்டிருக்கவில்லை.

மட்டக்களப்பு பூர்வ சரித்திரக் குறிப்புக்களின் படி, கலிங்க தேசம் கி.மு.3ஆம் நூற்றாண்டு முதல் இலங்கையுடன் தொடர்புகளை ஏற்படுத்தியிருந்தது. கலிங்கத்தின் புவ னேஸ்வரி துறைமுகத்தில் இருந்து மட்டக்களப்புக்கு நேரடியான பட்டுப்பாதை ஒன்றிருந்தது பற்றி அறிய முடிகின்றது[5]. கொக்கட்டிச்சோலை சிவன் கோவில் நிர்வாகத்தில், காலிங்க வம்சத்துக்கு வழங்கப்பட்டிருந்த தலைமைப் பதவியை சுட்டிக்காட்டி அவர்களின் சமூக நிலையினை வெல்ல வூர்க்கோபால் உயர்வாகக் காட்டு கின்றார் என்பதும் குறிப்பிடத்தக்கது. அதேவேளை, கொக்கட்டிச்சோலையின் உருவாக்கம் கி.பி. 3ஆம் நூ ற்றாண்டு என மட்டக்களப்பு பூர்வசரித்திரக் குறிப்புகளில் காட்டப்பட்டுள்ளன. ஆனால் அதற்கு முன்னரே கலிங்கத் தொடர்புகள் இருந்துள்ளன.

மட்டக்களப்பு பூர்வ சரித்திரக் குறிப்புக்களில் கலிங்கர் முதன்மைப்படுத்தப்பட்டுள்ளனர். மட்டக்களப்பு தேச த்தில் மைலம் பாவளி, ஏறாவூர், சந்திவெளி, சத்துருக் கொண்டான், சம்மாந்துறை, (மட்டக்களப்பு) அக்கரைப் பற்று, (கருங்கொடித்தீவு), கரைதீவு, (செங்கற்ப்படை) அம்பிளாந்துறை, பண்டாரியா வெளி, பங்கடாவெளி ஆகிய இடங்களில் குடியேறிக்கொண்டனர். மைலம்பாவெளி, சத்துருக்கொண்டான், ஏறாவூர் போன்ற இடங்களில்

முதன் முதலில் அவர்கள் குடியேற்றங்களை அமைத்துக் கொண்டனர் என்பதும் குறிப்பிடத்தக்கது [5].

## 4. கலிங்க மாகோன்

கலிங்கர், சிங்கர் ஆகிய வம்சத்தவர் காலத்துக்கு காலம் பலம்பெற்று மட்டக்களப்பு ஆட்சியதிகாரத்தைக் கைப்பற்றிக் கொள்வது வழக்கம். இந்த வரலாற்றுப்போக்கில் கி.பி. 9ஆம் நூற்றாண்டின் அரைப்பகுதி தொடக்கம் 13ஆம் நூற்றாண்டு வரையான (1209) இடைப்பட்ட காலத்தில சிங்கர் எழுச்சி பெற்று மட்டக்களப்பு இராச்சியத்தின் ஆட்சியைக் கைப்பற்றிக் கொள்வதனைக் காணலாம் [1]. அதாவது சிங்க குலத்து மன்னன் தருமசிங்கன் முதல் மன்னன் தினசிங்கன் வரை சிங்கர்கள் மட்டக்களப்பு தேசத்தின் ஆட்சியைக் தம்வயப்படுத்தியிருந்தனர் என்ப தனை மட்டக்களப்பு பூர்வ சரித்திரம் எடுத்துக் காட்டி யுள்ளது [1]. மீண்டும் கி.பி. 1214 ஆம் ஆண்டு முதல் கலிங்கர்களின் எழுச்சியை காணமுடிகின்றது. இக்காலப் பகுதியில் கலிங்கர்கள் சிங்கர்களுக்கு கட்டுப்பட்டவர்களாக அல்லது அடங்கி யவர்களாகக் காணப்பட்டனர்.

மட்டக்களப்பு பூர்வசரித்திரம் மட்டக்களப்பில் கலிங்கர் ஆட்சியை நிலைநிறுத்தவும் மீண்டும் இந்துமதத்தை கட்டிக்காக்கவும் கலிங்கமாகோன், அவன் தந்தை மனு வரதனினால் அனுப்பிவைக்கப்பட்டான் என்று விபரிக் கின்றது. ஆனால் மகாவம்சம் உள்ளிட்ட பாளி, சிங்கள நூல்கள் பொலனறுவையைக் கைப்பற்றி பௌத்த சமய த்தை அழித்தான் என்று விபரிக்கின்றன.

பொலனறுவையில் கலிங்கமாகோன் செலுத்திய அதிகாரத்தினால்தான், இராஜரட்டை அரசு வீழ்ச்சி கண்டு, தென், தென் மேற்குத் திசை நோக்கிய இடம்பெயர் இராஜ தானிகள் தோற்றம் பெற்றுக்கொண்டன என்பது இங்கு சுட்டிக்காட்டத்தக்கது. அதேவேளை மாகோன் மட்டக் களப்பு தேசத்தோடு கொண்டிருந்த தொடர்புகளை நாம் மறுக்க முடியாது. ஆனால் மட்டக்களப்பு பூர்வ சரித்திரம் விபரிக்கின்ற தன்மையில் இருந்ததா? என்பதனை உறுதிப்படுத்திக்கொள்ள நேரடியான சான்றுகள் இது வரைக் கண்டுபிடிக்கப்படவில்லை என்பதும் குறிப்பிடத் தக்கது.

மேலும் மாகோன் தோப்பாவை (பொலனறுவையைக்) கைப்பற்றிய குறிப்பு இந்நூலில் வருகின்றது [5]. மட்டக் களப்பினை காலிங்ககுலத்து சுகிர்தனுக்கு பட்டங் கட்டி பின்பு, இலங்கை முழுவதும் தன்வசப்படுத்தும் நோக்குடையவனாக மாகோன் செயற்பட்டான். பின் தோப்பாவைக்கு சென்று, மன்னன் அணிகங்கரன் என்பவனை வாளுக்கிரையாக்கி, அங்கிருந்த புத்த விகாரைகள், புத்தாலயங்கள் என்பவற்றை இடிப்பித்தான். பௌத்த குருமாரை சிறைப்பிடித்தான். தோப்பாவைக் கைப்பற்றி இலங்கை முழுவதும் ஆட்சி செய்தான். இவ னது செயற்பாடுகளினால், நாட்டில் வாழ்ந்த காலிங்க குலத் தவர்கள் சந்தோசமடைந்து இருந்தனர் என மட்டக்களப்பு பூர்வ சரித்திரம் விபரிக்கின்றது [1].

கதிர்காமம், விசயதுவீபம், அனுராதபுரம், போன்ற இடங்களில் சிவாலயங்களை அமைத்தான். மட்டக்களப்பில் காலிங்கரை எக்காலத்திலும் இராசராகவும், படையாட்சி, வங்கர், எனப்பட்ட இரு குலத்தவர்களையும் மந்திரிகளாய் இருக்கவேண்டும் எனக்கொள்கை வகுத்தான். வட இலங்கை என இராமேஸ்வரத்தை இலங்கையையும் சேர்த்து, மகோன் தோப்பாவையில் இருந்து அரசு புரிந் தான். இராமேஸ்வரம் இலங்கையோடு சேர்த்து நிர்வ கிக்கப்பட்டதாக புதிய வரலாற்றுத் தகவல் ஒன்றைத் இந்நூலாசிரியர் தந்துள்ளார். இதனை உறுதிப்படுத்திக் கொள்ள மறுபக்க சான்றுகளோ, ஆதாரங்களோ இல்லை. இக்கதை யாழ்ப்பாணத்தில் அரசமைத்த ஆரிய சக்கர வர்த்திகள் இராமேஸ்வரத்துடன் நெருங்கிய தொடர் களைக் கொண்டிருந்ததால் உருவாகியிருக்கலாம். அது மட்டுமல்லாமல் கலிங்கமாகோனைப் பெருமைப்படுத்த சேர்த்த கதை என்பதும் தெளிவாகின்றது.

பின்னர் மனுவரதன் (மாகோனின் தந்தை) தன் சகோதரர் மதிசுந்தரியின் மகள் அதிமதியை மாகோனுக்கு திருமணம் முடித்து வைத்ததாகவும் தினசிங்கன் சரித் திரம் என்ற பகுதியில் மாகோன் பற்றிய குறிப்புக்கள் தொடர்கின்றன. மட்டக்களப்பு பூர்வ சரித்திரம் காட்டும் இந்த விபரங்கள் மகாவம்சத்திலோ, வேறு எந்த தமிழ், சிங்கள, பாளி மொழியிலான வரலாற்று நூல்களிலோ நேரடியாகவோ, மறைமுகமாகவோ காட்டப்பட்டிருக்க வில்லை. மட்டக்களப்பு பூர்வசரித்திரத்தில், தின சிங்கன் சரித்திரம், சுகதிரன் சரித்திரம், குடிப்பிரிவுகள், குளிக் கல்வெட்டு முறை என்ற பகுதிகளிலும் மாகோன் தொடர்பு படுத்தப்பட்டுள்ளான்.

## 5. இலங்கை வரலாற்று நூல்களில் மாகோன்.

மட்டக்களப்பு பூர்வசரித்திரம் கலிங்க மாகோன் என் பவனை இலங்கையின் மத்தியகால சமூக, பொருளாதார, அரசியல் அம்சங்களோடு தொடர்புபடுத்தி செல்கின்றது. தீபவம்ஸம், சூளவம்ஸம் போன்ற நூல்கள் முறையே

துட்டகாமினி, முதலாம் பராக்கிரமபாகு, ஆகியோருக்கு கொடுத்துள்ள காவிய நாயகன் தரத்தை மாகோனுக்கு மட்டக்களப்பு பூர்வ சரித்திரம் கொடுத்துள்ளது எனக்குறிப் பிடலாம். இந்த வகையில் வேறு பல நூல்களிலும் மாகோன் பற்றிய குறிப்புக்கள் காணப்படுகின்றன. ஆனால் அவை பெருமளவுக்கு மட்டக்களப்பு பூர்வ சரித்திரம் காட்டி யுள்ள தகவல்களோடு ஒத்துப்போக வில்லை என்பதும் சுட்டிக்காட்டத்தக்கது.

பொலனறுவைக் கால வரலாற்றை விபரிக்கும் வர லாற்று நூல்களில் ஒன்றான சூளவம்சத்தில் பல இடங் களில் தமிழர் படையெடுப்புக்கள் பற்றிய குறிப்புக்கள் நேரடியாகவும் மறைமுகமாகவும் வருகின்றன. காலிங்க மாகன் அல்லது கலிங்க விஜயபாகு என்பவன் 24 ஆயிரம் போர் வீரர்களுடன் படையெடுத்து வந்து, பொலநறுவையை பாழாக்கி அங்கிருந்து ஆட்சி செய்த பாண்டிய குலத்தரசனைக் கொன்று, பௌத்த ஆலயங் களைக் இடித்து, அங்கிருந்த பௌத்த துறவிகளை விரட்டி, மேலும் கொடும் தொழில்களைப் புரிந்து பழிபாவத்திற் கஞ்சாதவனாக, கி.பி 1236ஆம் ஆண்டு வரை ஆட்சி செய்தான் எனக் கூறுகின்றது [6].

சிங்கள மொழியில் எழுதப்பட்ட, பூஜாவலிய என்ற நூலிலும் மாகோன் பற்றிய குறிப்புக்கள் வருகின்றன. மாகோனும் ஜெயபாகுவும் பொலநறுவையைக் கைப் பற்றி கி.பி 1215ஆம் ஆண்டு ஆட்சிக்கு வந்தனர். அவர் களின் ஆட்சி 2ஆம்பராக்கிரமபாகு [கி.பி. 1236 - 1270] தம்பதெனியா அரசனாக வரும் வரை நீடித்தது. இவர்கள் காலத்தில் பெருங்குடி மக்களும், சாதாரண பொதுமக்களும் மதம் மாற்றப்பட்டதாகவும், இரு தமிழ் அரசர்களும் 40 வருடங்கள் ஆட்சி செய்தனர் என்றும் குறிப்புக்கள் வருகின்றன. நிக்காய சங்கிரஹய என்ற சிங்கள நூலிலும் மாகோன் பற்றிய குறிப்புகள் வருகின்றன. முதலாம் பராக்கிரம பாகுவின் (1153 – 1186) பின், பதி னைந்து மன்னர்கள் பொலநறுவை ஆட்சியாளர்களாக இருந்துள்ளனர். அவர்களின் பின் காலிங்க விஜயபாகு (காலிங்கமாகன்) பராக்கிரமபாண்டுவை சிறைப் பிடித்து, அவனை குருடனாக்கி, நாட்டில் தனக்கெதிராக எழுந்த எதிர்ப்பை, வன்முறையைக் கையாண்டு அடக்கினான். தனிப்பட்டவர்களின் உடமைகள் பறிக்கப்பட்டன. பௌத்த மக்கள் மதம் மாற்றப்பட்டனர். மகோனின் கடுமையான தண்டனைகள் சித்திரவதை என்பனவற்றால் குடிமக்கள் துன்பப்பட்டனர். பொலநறுவை, புலச்சேரி, கொட்டியாரம், கந்தளாய், கந்தப்புலு, குருந்து, பதிமாலாட்டலா, மாட்டுக்கெனா தமிழ் பட்டிணம், ஊராந்தோட்டை, கொழுது, ஸ்ரீபாத தொட்ட மண்டலி, மன்னார், மன்னார் பட்டிணம் ஆகிய இடங்களில் இவனது படைகள் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தன என்ற குறிப்புக்கள் வருகின்றன [7].

இந்த நூலில், கலிங்க மாகோன் படைகள் 'மாட்டுக் கெனா தமிழ் பட்டிணம்' என்ற இடத்திலும் நிறுத்தி வைக்கப்பட்டதாக குறிப்புக்கள் வருகின்றன. இங்கு மட் டக்களப்பு என்ற சொல் திரிபடைந்து 'மாட்டுக் கெனா' எனவாயிற்று. மற்றையது இங்கு தற்போது தமிழர்கள் செறிந்து வாழ்ந்து வருவதால் 'தமிழ் பட்டிணம்' எனக் குறிப்பிடப்பட்டுள்ள இடம் மட்டக்களப்பைக் குறிப்பதாக கருத இடமுண்டாகின்றது.

இராஜாவலிய என்ற நூலில் இந்தியாவிலிருந்து 24000 கேரள, தமிழ் போர் வீரர்கள் சகிதம் வந்து இலங்கையை கைப்பற்றி, கலிங்க மாகோன் ஆட்சி செய்தான் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. அவனது ஆட்சி யில் வடக்கிலே ஊராதோட்ட, வலிகாமம், தெமள பட்டிணம், இலுப்பைக்கடவை, கிழக்கிலே கொட்டியாரம், திருகோணமலை, கந்தளாய், மேற்கிலே குருந்தன் குளம், மன்னார், மாந்தை, மத்தியில் பொலநறுவை, பதவியா, கொலன்நுவர, ஆகிய இடங்களில் இவனது படைகள் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தன. ஒவ்வொரு கிராமத்திலும் தமிழர்களைக் குடியேற்றினான் என நூல் குறிப்புக்கள் தொடர்கின்றன [8].

இதே போன்று யாழ்ப்பாண அரசு தொடர்பாக பிற் காலத்தில் எழுந்த "யாழ்ப்பாண வைபவமாலை" என்ற நூலிலும் கலிங்க மாகோன் பற்றிய குறிப்புக்கள் வருகி ன்றன. கி.பி 1215ஆம் ஆண்டில் காலிங்க விஜயபாகு அல்லது காலிங்கமாகன் என்னும் மன்னன் படையெடுத்து பொலநறுவையை பாழாக்கி, அங்கிருந்து கி.பி 1236 வரையும் பொலநறுவையில் அரசாண்டிருந்தான். இவனே சிங்கைநகர் அரசர்களுள் முதலாவதாக சக்கரவர்த்திப் பட்டமும், கீர்த்தி பிரதாபமும், பெற்றவனானபடியால் 'விஜய காலிங்க சக்கரவர்த்தி' எனவும், பாண்டியமளவனால் மதுரையிலிருந்து கொண்டு வரப்பட்ட சோழ அரச குமார னெனவும், அழைக்கப்பட்டான். இவன் நல்லூரில் முடி சூட்டப் பெற்றான். இவ் மன்னனுக்கு ஒரு கை மூளியாக (கூழங்கை) இருந்தமையால் கூழங்கையாரியன் என்றும் விஜயகூழங்கைச் சக்கரவர்த்தி எனவும் பெயரிட்டு அழைக் கப்பட்டான் எனக் கூறிச் செல்கின்றது [9].

இதே போன்று 'கைலாய மாலை' என்ற நூலில் கலிங்கமாகன் பற்றிய குறிப்புக்கள் வருகின்றன. யாழ்ப் பாணத்தில் முதல் மன்னனான சிங்கை ஆரியன்

என்பவன் பாண்டிய மழவனால் மதுரையில் இருந்து கொண்டு வரப்பட்ட சோழ அரச குமாரன் எனவும், அவன் நல்லூரில் முடி சூட்டப் பெற்றவன் எனவும் கைலாய மாலை குறிப்புக்களில் வருகின்றன. இந்த நூலில்,"..... தென்னவன் நிகரான செகராசன் தென்னிலங்கை மன்னவனாகுஞ் சிங்கை ஆரியமால்......"என வர்ணிக் கப்படுகின்றான் [10]. இவ்வாறு பல விபரங்கள் இந்த நூல்களில் கூறப்பட்டாலும் அந்த நூலில் மாகன் என நேரடியாக குறிப்புக்கள் காணப்படவில்லை என்பது சுட்டிக்காட்டத்தக்கது. "இதில் மன்னன் பெயர் 'காலிங்க' எனக் குறிப்பிடப்படாவிட்டாலும் இவ் விபரங்களை அடிப்படையாகக் கொண்டு, யாழ்ப்பாண வைபவமாலை என்ற நூலை எழுதிய மயில்வாகனப் புலவர் 'விஜய காலிங்க என்பதை 'விஜய கூழங்கை' ஆக்கி விட்டார் என யாழ்ப்பாண வைபவமாலை விமர்சனம் என்ற நூலில் சுவாமி ஞானப் பிரகாசர் எடுத்துக் காட்டியுள்ளனர். ' கை லாய மாலை' யில் சிங்கை ஆரியமால் என்று புகழ்ந்து கூறப்படுபவனும் கலிங்கமாகனே என்பது இவர்கள் கருத்தாகும். இவ்வுண்மை இந்நூலின் பிற்பகுதியில் இடம் பெறும் ஆய்வுகளில் இருந்து பெறப்படுகின்றது [3] என்ற தங்கேஸ்வரியின் கருத்தும் நோக்கத் தக்கது.

மேலும் ஹத்தவங்கல்ல விகாரவம்ச என்ற நூலி லும் மேல்வரும் தகவல்கள் காணப்படுகின்றன. பொல நறுவை ஆட்சி பலவீனமுற்றிருந்த காலப்பகுதியில் இலங்கையர்களால் புரியப்பட்ட ஒரு கொடூரமான பாதகச் செயலின் விளைவாக பௌத்த நெறியை அறவே அறிந் திராத பல்வேறு பிரதேசங்களில் இருந்து வந்த பகை வரின் படைகள், தவறான மார்க்கம் என்ற புதரில் சிக் குண்டவர்கள், ஜம்புத்தீவில் இருந்து வந்து இறங்கி ஈழம் முழுவதும் குழப்பமும் ஆபத்தும் நிறைந்த நிலைக்கு உள்ளாக்கினர் [11] எனக்குறிப்புக்கள் வருகின்றன. அதாவது கலிங்க மகோன் பௌத்த சமயத்துக்கும், பௌத்த கட்டடங்களுக்கு செய்த கொடுமைகள் விபரிக்கப் பட்டுள்ளன.

யாழ்ப்பாண வைபவ விமர்சனம் என்ற நூலில் சுவாமி ஞானப்பிரகாசர் தரும் குறிப்புக்கள் மாகனைப் பற்றியதாக காணப்படுகின்றன. கலிங்க மாகோன், ஜயபாகு என்னும் இரு தமிழ் அரசர்கள் காலிங்க தேசத்தில் இருந்து பெரும் படையோடு வந்து, வட இலங்கையை ஆண்டனர். ஜயபாகு யாழ்ப்பாண நாட்டை அரசாள, மாகன் 1215ம் ஆண்டு தொடக்கம் புலத்தி நகரில் வீற்றிருந்து தென்னிலங்கை முழுவதையும் தனிக்குடையின் அடக்கி ஆட்சி செய்தான். 1242ஆம் ஆண்டளவில் காலிங்க மாகன் வட திசை செல்ல நேரிட்டது. காலிங்க ஆரிய சக்கரவர்த்தி புலத்தி நகரை விட்டு யாழ்ப்பாணம் சென்று ஜயபாகு இறந்து விட்ட படியால் யாழ்ப்பாண அரசினை நிலைநாட்டினான். ஜயபாகு என்னும் உக்கிர சிங்கன் இராசதானியாக இருந்த சிங்கை நகரை மாகன் என்னும் காலிங்க சக்கரவர்த்தி திருத்தினான் எனவும் கொள்ள வேண்டும் [12].

இராஜதரங்கனி என்ற நூலிலும் காலிங்க மாகனைப் பற்றிய குறிப்புக்கள் வருகின்றன. மாகனின் மதவெறி இந்துமதத்தின் சகிப்புத்தன்மைக்கு மாறானது. அவன் ஆலயங்களின் செல்வங்களைப் படைவீரர்களைக் கொண்டு கொள்ளையடிக்கச் செய்தது, இந்தியாவில் ஹர்ச மன்னன் செய்த அட்டூழியங்களைப் போன்றது. ஹர்சன் தெய்வ விக்கிரகங்களை உடைத்தான். தெய்வச் சிலைகள் மீது மலசலம் ஊற்றச் செய்தான். ஹர்சனின் மனிதாபிமானம் அற்ற செயல்களைப்போன்றே மாகனுடைய செயல்களும், ஹரிசனைப் போலவே மாகனும் பிராமணர்களைக் கொண்டு வேலை வாங் கினான். ஹர்சன் செய்ததைப் போன்று கொலைகள் செய்து, கொல்லப்பட்டவர்களின் தலைகளை முன்வாயில் தோரணங்களில் தொங்கவிட்டான். அதனால் எப்போதும் நரிகளின் கூச்சலும், சத்தமும், கேட்டுக்கொண்டே இருந்தது. மாகனும், ஹர்சனும் செய்த சமயக் கொடுமைகள் ஒரே மாதிரியானவை [13]. இவ்வாறு மாகனை கொடூர மானவனாக ஹர்சனுடன் ஒப்பிட்டு அந்த நூல் குறித்து ரைத்துள்ளது. இதே போன்று ராஜரட்ணாகாரய, சத்தர் மரட்னாகாரய ஆகிய நூல்களிலும் மகோன் பற்றிய கருத்துக்கள் வருகின்றன. இக்குறிப்புக்களின் அடிப்ப டையில், தங்கேஸ்வரி மேல்வரும் கருத்துக்களை முன் வைத்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

"மேற்படி நூல்களைப் படிக்கும்போது, வரலாறும், கதைகளும் கலந்து வருவதை எவரும் அவதானிக்கலாம். இவற்றுள் பௌத்த நூல்களான சூளவம்சம், பூஜாவலிய, நிக்காய சங்கிரஹாய, ஹத்தவங்கல்ல, விஹாரவங்ஸ, முதலியவை காலத்தால் முந்தியவையாக இருந்தாலும் பின்வந்த ஆய்வாளர்களான, பரண விதான, லியன ஹமகே போன்ற வரலாற்றாசிரியர்கள் இவற்றைத் துரு வித் துருவி ஆராய்ந்து சில தகவல்களை ஆதார பூர்வ மாக நிறுவியுள்ளதாலும், இந்த நூல்களில் கதைகள் குறைவாகவும், வரலாறு அதிகமாக இருப்பதையும் நாம் ஏற்றுக்கொள்ளலாம். ...............•

அதே வேளை மட்டக்களப்பு பூர்வ சரித்திரம், யாழ்ப்பாண வைபவமாலை, கைலாயமாலை,

வையாபாடல், போன்ற நூல்கள் மிகவும் பிற்பட்ட காலத்தில் எழுதப்பட்டிருப்பதாலும், இவற்றை எழுதிய புல வர்கள் பெரும்பாலும் ‘ பெரும் கேள்விச் செவியர்’களாக இருப்பதாலும் இவற்றில் வரலாற்றுத் தகவல்கள் குறைவாகவும் ‘கதை’ அதிகமாகவும் இருப்பதை மறுக்க முடியாது [14].

எனவே, இந்த நூல்களில் மாகோன் பற்றி வரும் குறிப்புக்கள் தொடர்ச்சியாக மீளாய்வு செய்யப்பட வேண்டும் என்பதை பேராசிரியர் பத்மநாதன், தங்கேஸ்வரி உள்ளிட்ட ஆய்வாளர்கள் ஏற்றுக்கொண்டுள்ளார். இந்த கருத்தின் அடிப்படையில் மட்டக்களப்பு பூர்வசரித்திர குறிப்புக்களில் வருகின்ற மாகோன் பற்றிய கருத்துக்களையும் ஆராய்தல் வேண்டும் என்பதாக அமைகின்றது.

சூளவம்சம், மட்டக்களப்பு பூர்வ சரித்திரம் போன்ற நூல்கள் தரும் தகவல்களையே பெரும்பாலும் வரலாற்றாசிரியர்கள் எடுத்துரைக்கின்றனர். இதுவரையும் அந்த நூல்களில் வருகின்ற கருத்துக்களை உறுதிப்படுத்திக் கொள்ளக்கூடிய தொல்லியல் ஆதாரங்கள் அதிகம் கண்டு பிடிக்கப்படவில்லை. இதனால், கலிங்கமாகன் தொடர்பில் மட்டக்களப்பு பூர்வசரித்திரத்தில் வரும் குறிப்புக்களை முழுக்க முழுக்க புறம் தள்ளிவிடவும் முடியாது என்பதும் குறிப்பிடத்தக்கது.

மட்டக்களப்பு பூர்வசரித்திரத்தைப் போன்று தமிழ் இலக்கிய சான்றுகளும், காலிங்க மாகனுடைய படையெடுப்பு, ஆட்சி தொடர்பான கருத்துக்களைத் தருகின்றன. மட்டக்களப்பு, திருகோணமலை, மற்றும் யாழ்ப்பாண வரலாற்று ஆவணங்கள் இவனது ஆட்சியை பெருமைப்படுத்தி பேசும் நிலையில், சிங்கள பௌத்த வரலாற்று நூல்கள் இவனை ஒரு கொடுங்கோலனாக சித்தரிக்கின்றன. வீரசைவனான மாகோன் சிங்கள ஏகாதிபத்தியத்திற்கும், பௌத்த மேலாதிக்கத்திற்கும் எதிராக செயற்பட்டமையே இதற்கு காரணமாகும். எனினும் பிற்பட்ட வரலாற்று ஆசிரியர்கள் பலர் அவனது ஆட்சியில் கடைப்பிடிக்கப்பட்ட நீதியான அரசியல் அமைப்பையும், கட்டுக்கோப்பு மிக்க நிர்வாகத் திறனையும், வியந்து நோக்கவே செய்கின்றனர் [3].

அந்தவகையில் அறுதியான முடிவினைப் பெற்றுக் கொள்ள முடியாது எனக்குறிப்பிட்டுள்ளார். மேலும் மகாவம்சம் குறிப்பிடும் கலிங்க மாகனையே மட்டக்களப்பு பூர்வ சரித்திரமும் சுட்டுகின்றது. அந்த நூலில் கலிங்கமாகன் என்ற சொற்றொடர் காணப்படுகின்றமையால் இக்கருத்து மேலும் வலுப்பெறுகின்றது எனவும் பொலனறுவையில் சமயப் பூசல்கள், பகமைகள் மேலோங்கிய காலத்தில் மாகோனின் படையெடுப்பு நிகழ்ந்தது எனவும், அவன் வீரசைவர் பரம்பரையைச் சேர்ந்தவன் ஆகையால் பௌத்த சமயத்துக்கு எதிராக செயற்பட்டான், இவனே மட்டக்களப்பு தேசத்து சமூகக் கட்டமைப்பை வளர்த்தான் எனவும் பத்மநாதன் ‘ஈழத்தமிழரும் புராதன குடிகளும் மட்டக்களப்பு தேசமும்’ என்ற கட்டுரையில் விளக்கியுள்ளமையும் சுட்டிக்காட்டத்தக்கது [15].

## 6. முடிவுரை

எனவே, காலிங்க மாகோன் மட்டக்களப்பு வரலாற்றோடு தொடர்புபடுத்தப்படும் முக்கியமான மன்னன். அவனே கலிங்க ஆட்சியை மட்டக்களப்பு தேசத்தில் மீண்டும் கட்டிக் காத்தான். அதற்கு எனத் திட்டங்கள் வகுத்தான். அவனது காலத்தில் பௌத்த சமயம் செல்வாக்கிழந்து கொண்டது. அங்கு வீரசைவம் இடம்பிடித்துக் கொண்டது. சோழர் ஆட்சியின் பின் மட்டக்களப்பு அரசியல் வரலாறு பொலநறுவைக்கு கட்டுப்பட்டதாக அமைந்திருந்தது.

பொலநறுவையை கலிங்கமாகன் கைப்பற்றிய பின் மீண்டும் சுதந்திரமான அரசாட்சி முறைமை ஒன்று இங்கு தோற்றம் பெற்றுக் கொண்டதையும் அவதானிக்க முடிகின்றது. காலிங்க மாகனின் பொலனறுவை வெற்றியானது, இலங்கை வரலாற்றில் திருப்புமுனையாக அமைந்திருந்தது. அதாவது, அவனது ஆட்சி குறுகிய ஆயுளைக் கொண்ட, தென் மேற்கு திசை நோக்கிய இடம்பெயர் இராஜதானிகளின் தோற்றத்திற்கு வழிவகுத்தது. அது மட்டுமல்ல, மட்டக்களப்பு உட்பட பல பிராந்தியங்களில் ‘பிராந்தி அரசுகள் வலுப்பெற்றுக்கொண்டன. மட்டக்க ளப்பு சமுதாயத்தின் பிரதான அம்சமான குடிமுறை, மட்டக்களப்பு முக்குவர் வன்னிமைகள், மட்டக்களப்பு தேசத்து ஆலயத் தொழும்புகள் என்பன மாகோனால் வகுக்கப் பட்டன.

மட்டக்களப்பு பூர்வ சரித்திர ஆசிரியர் கலிங்கர் ஆட்சியை வலியுறுத்த மட்டக்களப்பு தேசத்து வரலாற்றோடு அவனை வலிந்து பல விடயங்களில் தொடர்புபடுத்துவது போல் தோன்றுகின்றது. கலிங்கர் ஆட்சியை மீண்டும் நிலை நாட்டும் பொருட்டு சிங்ககுலத்து மன்னன் தின சிங்கனுக்கு எதிராக படையெடுப்பு மேற்கொள் ளப்பட்டதாக குறிப்பிடப்பட்டுள்ளது. “.. மட்டக்களப்பிலே காலிங்கரே எக்காலமும் இராசராகவும், படையாட்சி, வங்க இரு குலத்தவரும் மந்திரியாக வரவேணும் என திட்டம் செய்து …” என மட்டக்களப்பு பூர்வ சரித்திரத்திலே வரும் இக்கூற்று கலிங்க குலத்தவர்களுக்கு முன்னுரிமை கொடுக்க வேண்டுமென இந்நூலாசிரியர் வற்புறுத்துவதாக

காணப்படுகின்றது. எனவே, இந்நூலினை எழுதியவர் காலிங்க குலத்தை உயர்த்துவதற்கு, கலிங்க மாகனை சாட்சியாக இணைத்துள்ளார் எனத் தோன்றுகின்றது. அவனை தலைவனாக்கி அவன் கட்டளைகளாக மட்டக்களப்பு தேசத்தின் சமூகக் கட்டமைப்பை நிலை நாட்ட முயன்றுள்ளார் என்பதும் தெளிவாகின்றது.

**உசாத்துணைகள் :**


[1] கமலநாதன்.சா. கமலா கமலநாதன், "மட்டக்களப்பு பூர்வ சரித்திரம்", மட்டக்களப்பு, 2005.

[2] Tenet.J.E., "Cambridge History of India", India, 1965.

[3] தங்கேஸ்வரி.க.,"தமிழ் மன்னன் மகோனின் மகத் தான வரலாறு",சென்னை,2005.

[4] Neelakanda Sastri.K.A.,"A History of South India", Madras,1955, .

[5] வெல்லவவூர் கோபால்., "மட்டக்களப்பு வரலாறு – ஓர் அறிமுகம் மட்டக்களப்பு",2011.

[6] "Culavamsa, Wilhelm Geiger", (Tran) Madras, 1992.

[7] Nikaya Sagrahaya, Wikramasinghe D.M. de Z., (Ed) Colombo, 1890

[8] Gunasekara.B.,Rajavaliya,Colombo, 1945.

[9] "யாழ்ப்பாண வைபவமாலை", சபாநாதன் குல, (பதிப்பு), யாழ்ப்பாணம்,1945,ப.18.

[10] முத்துராஜ கவிராயர்., "கைலாயமாலை", ஜம்பு லிங்கம் சி.வி (பதிப்பு), மெட்ராஸ்,1935,ப.5.

[11] "Hattavangalla Viharavasa", Godakumbura C.E.B (Ed).,London, 1946

[12] ஞானப்பிரகாசர்., "யாழ்ப்பாண வைபமாலை" விமர்சனம,1945.

[13] இராசநாயகம்,செ., "யாழ்ப்பாண சரித்திரம்", யாழ்ப் பாணம்,1993.

[14] Rajatharangani Stein A.M (Trn)., (Vol- 1) West minister,

[15] பத்மநாதன். சி., "ஈழமும் தமிழரும் புராதன கால குடிகளும் மட்டக்களப்புதேசமும்" விபுலானந்தர் நினைவு பேருரை 2000.